1979 ஏப்ரல் 21]

திரு. மு. ஜான் வின்செண்ட்: பர்ஸ்ட் குருப்பில் மேத்ஸ் வருகிறது, செகண்ட் குருப்பில் மேத்ஸ் இல்லை. அப்படிப் படிக்கின்ற மாணவர்களுக்கு பின்னால் கல்லூரியில் படிக்கச் செல்லும்போது ஏதும் இடைஞ்சல் வராமல் இருக்குமா? வந்தால் அதைத்தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது என்று அறியவிரும்புகிறேன்?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவை செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பள்ளி களுக்கு அரசு மானியம் அளிக்கும் தொகை எவ்வளவு? மாறு படுகிறதா இல்லையா என்பது பற்றித்தான் கேள்வி கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆகையால் தனிக் கேள்வியாகப் போட்டால் பதில் சேகரித்து தயாரித்து அளிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அரியலூர் அரசினர் கல்லூரி மாணவர் விடுதி

*வினா எண் 768 திரு. ரா. மார்க்கபந்து: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:

(அ) அரியலூர் அரசினர் கல்லூரி மாணவர்கள் விடுதி எந்தவிதமான வசதியும் இல்லாத தனியார் கட்டிடத்தில் இருப்பது தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மேல் எடுத்த நடவடிக்கை என்ன?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவை செயலர்):

(அ) & (ஆ) ஆம்.

அரியலூர் அரசினர் கலைக் கல்லூரி விடுதி கட்டிடம் கட்டுவதற்கென நிதியுதவியளித்து அரசினர் ஆணை பிறப்பித் துளளனர். இவ்விடுதிக் கட்டிடம் துரிதமாக இவ்வாண்டே கட்டி முடிப்பதற்கென தகுந்த நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

திரு. ப. சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விடுதி கட்டிடம் புதிதான இடத்தில் கட்டப் படுமா? அல்லது ஏற்கெனவே உள்ள இடத்தில் கட்டப்படுமா? அல்லது கல்லூரி காம்பவுண்டிங்குள்ளேயே கட்டப்படுமா? என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவை செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விடுதி தற்போது மூன்று தனியார் இடங்களில் இருந்து வருகிறது. தற்போது விடுதி கட்டும் திட்டத்திற்கு 6 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவில்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கட்டுவதற்கு அரசு அனுமதி அளித்து இருக்கிறது. அரசின் பங்காக ரூ. 3 லட்சத்து 80 ஆயிரம், பல்கலைக் கழகத்தின் மானியமாக ரூ. 2 இலட்சத்து 40 ஆயிரம் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அரியப்பாடி கிராம அரிசனமக்களுக்கு ஒதுக்கப்பட்ட வீட்டு மனைகள்

*வினா எண். 769 திரு. ப. சந்திரன்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியம் அரியப்பாடி கிராம அரிசன காலனி மக்களுக்கு அரசு வீடு கட்ட இடம் கொடுத்தும் அதில் அவர்கள் வீடு கட்டிக்கொள்வதை அந்த ஊர் மக்கள் தடுப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:

(அ) பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியம் வந்தவாசி தாலுகா, அரியபாடி கிராம அரிசன காலனி மக்களுக்கு இது வரை அரசு மூலம் நிலம் கையகப்படுத்தி வீட்டு மனைகள் வழங்கப்படவில்லை. ஆனால் அந்த ஊர் மக்கள் சர்வே 109 மயானப்புறம்போக்கில் அரிசனங்கள் வீடுகள் கட்டிக்கொள்வதை ஆட்சேபிக்கிறார்கள்.

(ஆ) அந்த நிலம் மயானமாக ஜாதி இந்துக்களும், அரிசனங்களும் உபயோகிப்பதால் அவர்களின் ஆட்சேபனைகள் சரியே. வீடில்லா 19 ஏழை அரிசன குடும்பங்களுக்கு வீட்டுமனை அளிக்கும் கருத்துருவுக்கு 9-2-79-ல் அரசு ஆணை பிறப்பித்து உள்ளது. மேற்கொண்டு விதி முறைகளின்படி நடவடிக்கைகள் தொடரப்பட்டு வீட்டுமனைகள் வழங்கப்படும்.

திரு. ப. சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல் அந்த மயானப் புறம்போக்கிற்கு எவ்விதத் தொடர்பும் இல்லை. அவர்களுடைய குறைகள் எல்லாம் அந்தப் பகுதியில் அந்த அரிசன மக்கள் வாழ்வார்களானால், அந்தப் பகுதியில் இருந்து வரும் நீர் அங்கே அருகில் உள்ள ஊர் குளத்திற்கு வரும். எனவே அந்தக் குளத்து நீர் குடிப்பதற்கு ஏற்ற நிலை இல்லாமல் இருக்கும் என்ற காரணத்தால்தான் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். ஊரிலே பல கிணறுகள், குடி நீர் கிணறுகள் இருப்பதால், இப்படிப்பட்ட எதிர்ப்பு சொல்ல நியாயம் இல்லை. ஆகவே, அரசு உடனடியாக இதில் தலையிட்டு துரித நடவடிக்கை எடுக்குமா?